17.7.2024
ஊடக வெளியீடு

Ir. Pathmanathan K.
தலைமை நிர்வாக அதிகாரி
PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**பினாங்கின் WCP 2030 திட்டங்கள் சிறப்பாக முன்னேற்றம் கண்டு வருகின்றன**

- **முதலாவது WCP 2030 திட்டம் 2023 இல் நிறைவடைந்தது**
- **இரண்டாவது WCP 2030 திட்டம் செப்டம்பர் 2024 இல் தொடங்கப்படும்**
- **மூன்றாவது மற்றும் நான்காவது WCP 2030 திட்டங்கள் 2024, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் தொடங்கும்**

பினாங்கு, புதன், 17.7.2024: பினாங்கில் அதிகரித்து வரும் நீர்த் தேவையைப் பூர்த்திச் செய்வதற்காக, PBAPP தனது இரண்டாவது நீர் தற்செயல் திட்டம் 2030 (WCP 2030)-ஐ 2024, செப்டம்பரில் செயல்படுத்தும்.

- முதலாவது WCP 2030 திட்டமானது, புக்கிட் பஞ்சோர் நீர் சுத்திகரிப்பு ஆலையில் (WTP) ஒரு நாளைக்கு 10 மில்லியன் லிட்டர் (MLD) DAF நீர் சுத்திகரிப்பு செய்யும் தொகுதி ஆகும். இந்தத் திட்டம் 2023, டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது மற்றும் தெற்கு செபராங் பிறையில் (SPS) 10 MLD வரை கூடுதல் சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகிப்பதற்கு உற்பத்தி செய்து வருகிறது.
- இரண்டாவது WCP 2030 திட்டமானது, சுங்கை டுவா WTP இல் செயல்படுத்தப்படும் தொகுப்பு 12A திட்டமாகும். இந்த ஆண்டு செப்டம்பரில் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. தொகுப்பு 12A திட்டமானது, சுங்கை டுவா WTP இன் சேவைப் பகுதிகளில் விநியோகிக்க PBAPP கூடுதல் 114 MLD சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்திச் செய்ய அனுமதிக்கும். இதில் தெற்கு செபராங் பிறை (SPS) மற்றும் பினாங்கு தீவில் உள்ள தென்மேற்கு மாவட்டம் (DBD) பகுதிகள் அடங்கும்.
- மூன்றாவது மற்றும் நான்காவது WCP 2030 திட்டப் பணிகள் 2024, நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் தொடங்கும்.

  மூன்றாவது திட்டத்தில் சுங்கை டுவா WTP இருந்து பட்டர்வொர்த் வரை 13.0கி.மீ இடைவெளியில், 1.8மீ குழாய் அமைப்பது அடங்கும். நான்காவது திட்டத்தில் பினாங்கு தீவில் உள்ள மெக்கல்லம் பகுதியிலிருந்து புக்கிட் டும்பார் வரை 3.9 கி.மீ நீளமுள்ள மற்றொரு 1.8மீ குழாய் அமைக்கப்படும்.

2025 இல் தொடங்கப்படும் போது, இந்த 2 பெரிய குழாய்த் திட்டங்கள் பினாங்கு தீவில் உள்ள சுங்கை டுவா WTP இலிருந்து தென் மேற்கு பகுதிக்கு PBAPP சுத்திகரிக்கப்பட்ட நீர் பம்ப் செய்யும் திறனைக் கணிசமாக அதிகரிக்கும்.

இன்று வரையிலான WCP 2030 திட்டப் பணிகளின் முன்னேற்றம், பினாங்கில் புதிய மற்றும் கூடுதல் நீர் விநியோக உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான PBAPP இன் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. மேலும், பினாங்கில் 689,786 நீர்ப் பயனீட்டாளர்களின் அதிகரித்து வரும் நீர்த் தேவைகளுக்குத் தீர்வுக் காண PBAPP தீவிரமாக உள்ளது.

இன்றுவரை, PBAPP முதலாவது மற்றும் இரண்டாவது WCP 2030 திட்டங்களுக்கும் மற்றும் 2023 மற்றும் 2024 SPS மாற்று திட்டங்களுக்கும் மொத்தம் ரிம51.52 மில்லியன் முதலீடுச் செய்துள்ளது.

மூன்றாவது மற்றும் நான்காவது WCP 2030 திட்டங்கள், செபராங் பிறை மற்றும் பினாங்கு தீவில் பெரிய குழாய் பொருத்தும் வேலைகளை உள்ளடக்கி, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டில் ரிம172.0 மில்லியன் கூடுதல் கூட்டு முதலீட்டை அங்கீகரித்துள்ளது.

WCP 2030 இன் 3 முக்கிய நோக்கங்கள்:

1. பினாங்கில் 2019 ஆம் ஆண்டு முதல் (கோவிட்-19 தொற்றுநோய்க்கு முன்) நீர் பயன்பாடு 10% அதிகரித்துள்ளதற்கு ஏற்ப, 2030 ஆம் ஆண்டு வரை போதுமான நீர் விநியோகத்தை உறுதி செய்தல்;
2. குறைவான மூல நீர் ஆதாரங்கள், காலநிலை மாற்றம் மற்றும் அதிகரித்து வரும் நீர்த் தேவை ஆகியவற்றில் பினாங்கின் நீர் அபாயங்களைக் குறைத்தல் மற்றும் நிவாரணம் செய்தல்; மற்றும்
3. மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ரிம 4 பில்லியன் பேராக்-பினாங்கு நீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நேரத்தை ஒதுக்குதல்.

மேலும், PBAPP 2024 ஆம் ஆண்டில் சுங்கை பிறையில் 1.35மீ இருந்து 110மீ ஆற்றைக் கடக்கும் குழாய் அமைப்பதற்காக ரிம18.0 மில்லியனைக் கூடுதலாக முதலீடுச் செய்யும். இந்த ஆற்றைக் கடக்கும் குழாய்த் திட்டம் செப்டம்பரில் தொடங்கி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit
மின்னஞ்சல் : syarifah@pba.com.my